# ஆதியாகம புஸ்தகத்திலிருந்து வெளிப்பாடுகள்

2

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# முழு பாதாளமும் திறக்கப்படும்போது முழு பரலோகமும் திறக்கப்படும்





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

28. இப்போது, நாம் ஜீவிக்கின்ற இந்த நாளை நோக்கிப் பாருங்கள். (நான் மரியாதைக்குரிய பெண்களைக் குறித்துப் பேசவில்லை, இல்லை ஐயா, அவர்கள் தேவனின் கருவிகள்.) ஆனால் அவர்களைக் காட்டிலும் அதிகமானோர் "பெண் கொண்டும் பெண் கொடுத்தும்" தங்களைக் குறித்து அக்கரையில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். நான் அவர்களைப் பற்றி தான் பேசுகிறேன். அவ்விதமாகத் தான் இருக்கும் என்று தேவன் வேதத்திலே கூறியிருக்கிறார். நோவாவின் நாட்களானது முடிவிற்கு வருமுன், அவர்கள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் இருந்தார்கள் என்று இயேசு சொன்னார். **இன்று உலகத்திலே கலக்கம் அதிகமாய் இருக்கிறதை நாம் காண்கிறோம். இவை எல்லாம் இப்படி இருப்பதற்கு ஒரே ஒரு காரணம் தான். அதாவது வலிய, பொல்லாத ஆவிகள் இறங்கி மக்களுக்குள்ளாக புகுந்து இந்தக் காரியங்களை செய்தது என்று வேதம் கூறினதை நாம் உணர்கிறோம். அதே அசுத்த ஆவிகள் தான் இன்றும் நம்முடைய நாட்களிலே கிரியை செய்து வருகிறது.**

29. இப்பொழுது கவனியுங்கள், **முழு பாதாளமும் திறக்கப்படும்போது முழு பரலோகமும் திறக்கப்படும். வெள்ளம் போல சத்துரு வந்தாலும், கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுகிறார்.** (தன் தரத்தை உயர்த்துகிறார்). **ஆகவே இந்த இரண்டு வல்லமைகளும் எப்பொழுதுமே சந்திப்புகளிலே வெளிப்படுகின்றன.**

30. இப்பொழுது நிம்ரோத் தன் காலத்திலே, எல்லா குழுக்களையும் ஒன்றாகச் சேர்த்து, எல்லா மக்களையும் பாபிலோனுக்கு வரவழைத்து ஒரு மாபெரும் கூட்டமைப்பை அமைத்தான். அங்கே பெண்கள் மத்தியில் எல்லா விதமான பாலுணர்ச்சி சம்பந்தப்பட்ட அசுத்தமான காரியங்களும் அது போன்றவைகளும் அவர்களுக்கிடையே நடந்தது. **ஆனால் அதே நேரத்தில்தான், தேவன் இந்த பூமியிலே, எந்த குற்றமுமில்லாத அவரோடு நடந்த ஏனோக்கை ஒரு சாட்சியாக கொண்டிருந்தார். அசுத்த ஆவிகள் இந்த பூமியிலே எந்த நேரத்தில் தோன்றினதோ அதே நேரத்திலே தூதர்களும்**

**தோன்றினார்கள். அந்த தூதர்கள் மனிதர்களுக்குள் பிரவேசித்தார்கள்.**

31. **இது இன்றைய நாளிற்கு ஒரு அழகான மாதிரியாக இருக்கிறது. பொல்லாங்கானது தோன்றும் வேளையில் நன்மையும் தோன்றுகிறது.**

*செய்தி: 56-01-15 காலத்தின் சந்திப்பு*

★★★★★

# தேவன் ஒரு மனிதனை, அதைக் குறித்து எச்சரிக்காமல், அவனை அவனுடைய மரணத்துக்கு கொண்டு வருவதில்லை





## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத்தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை, ஜூலை 24, 1963

இப்பொழுது, எல்லோருமே இந்த கருத்தைக் கொண்டுள்ளனர். **நாம் ஒருக்கால், "இந்த ஆள் எந்த எச்சரிக்கையுமின்றி மரித்துப் போனான்" என்று கூறக்கூடும். இல்லை, இல்லை, இல்லை, தேவன் ஒருபோதும்... அந்த மனிதனின் இருதயத்தில் என்ன இருந்தது என்பதை நீங்கள் அறியீர்கள். அவனுடைய வாழ்க்கையில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை நீங்கள் அறியீர்கள்.** பாருங்கள்? **தேவன் ஒரு மனிதனை, அதைக் குறித்து எச்சரிக்காமல், அவனை அவனுடைய மரணத்துக்கு கொண்டு வருவதில்லை. அதை ஒரு ஆயத்தமாக அவனுக்கு முன்னறிவிக்**

**கிறார்.** தேவன் இராஜாதிபத்தியம் உள்ளவர். **அவர் ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தையும் தட்டி அவன் வருவதற்கான தருணத்தை அவனுக்கு அளிக்கிறார். அவன் ஒருக்கால் எச்சரிப்பை ஏற்றுக் கொள்ளாமல் அதை நிராகரித்து, தன் தலையை குலுக்கி அதிலிருந்து விலகிச் சென்று,** "ஆ, இது ஏதோ ஒரு விசித்திரமான உணர்ச்சி, அதை மேற்கொள்வேன்" **என்று கூறிவிடலாம். ஆனால், என்னவாயினும், அது தேவன், தேவன் அவனிடம் பேசுதல்.**

**தேவன் ஜனங்களுக்கு முதலில் எச்சரிக்கை விடுக்காமல், இந்த உலகத்தின் மேலும் கூட நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருவதில்லை.** தேவன், தாம் என்ன செய்யப் போகிறார் என்பதை முதலில் அறிவிக்காமல், எதையும் செய்வதில்லை. **தேவன் ஜனங்களுக்கு தெரிந்தெடுத்தலை** (Choice) **அளிக்கிறார்.** நீங்கள் சரியானதை செய்யலாம், அல்லது தவறானதைச் செய்யலாம், அது அவருடைய... **பாருங்கள், தேவன் ஒருபோதும் தமது சுபாவத்தை மாற்றிக் கொள்ளமுடியாது.** அவருடைய திட்டம், அவர் எதிலிருந்து தொடங்

கினாரோ, அதிலிருந்து மாறமுடியாது. ஏனெனில் அவர் முடிவற்றவர், அவருடைய திட்டமும் கருத்துக்களும் எல்லாமே பரிபூரணமானவை. எனவே, அவர் அதை மாற்றுவாரானால், அவர் அதிகம் கற்றுக் கொண்டார் என்பதாக ஆகிவிடும். அவர் முடிவற்றவராயிருப்பதால், அவரால் அதிகம் கற்றுக் கொள்ள முடியாது. **அவருடைய முதலாம் தீர்மானம் எப்பொழுதுமே பரிபூரணமாய் உள்ளது, அதை எதுவுமே மாற்ற முடியாது.** பாருங்கள்?

தேவன் மனிதனுக்கு... **அவன் தவறு செய்யத் தருணம் கிடைப்பதற்கு முன்பாக, அதை ஏற்றுக்கொள்ள அல்லது புறக்க ணிக்கக் கூடிய அடிப்படையில் அவனை வைத்தார் - அவன் ஏற்றுக் கொள்வானா, இல்லையா என்று.**







80. அதிலுள்ள மிகவும் மோசமான காரியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியை நீங்கள் அடிக்கடி துக்கப்படுத்தும்போது அந்த எல்லைக் கோட்டை தாண்டிப்போனவர்களாக இருக்கிறீர்கள். அப்போது மனந்திரும்புதலுக்கு இடமில்லாமல் இருக்கும் அந்த இடத்திற்குப் போய் அந்தகாரத்தின் ராஜ்ஜியத்திற்குள்ளாக முத்திரிக்கப்பட்டிருப்பீர்கள். அங்கே ஆண்டவராகிய இயேசுவை ஒருபோதும் காணமுடியாது. அங்கே வாழ்கைக்கான நம் பிக்கையை ஒருபோதும் காணமுடியாது. நீங்கள் என்றென்றைக்குமாய் வெளியிலே தள்ளப்பட்டவர்களாய் குறிக்கப்பட்டிருப்பீர்கள். ஓ,

இது என்ன ஒரு சரியான எச்சரிக்கை பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் இதை உங்கள் இருதயத்தின் ஆழத்திற்குள் கொண்டு செல்வாராக.

81. எல்லைக் கோட்டண்டை நிற்கிறவர்களே, "நான் முற்றிலும் அற்பணிக்கப்பட்ட கிறிஸ்தவனாகிட விரும்புகிறேன். ஆனால் நான் அதை எப்பொழுது செய்வேன் என்று என்னுடைய சிந்தையிலே முடிவு எடுக்கிறேனோ அப்பொழுது தான் செய்வேன்" என்று அநேக முறை சிந்தித்திருக்கிறீர்கள். ஓ, என் சகோதரனே சகோதரியே, நீங்கள் அவ்விதம் மாறுவதற்கு இதுவே உங்களுடைய கடைசி தருணமாய் இருக்கக் கூடும் என்பதை உணரமுடிகிறதா? நீங்கள் கிறிஸ்தவ விசுவாசிகளாவதற்கு இப்படிப்பட்ட ஒரு தருணம் இனிமேல் உங்களுக்கு கிடைக்கக் கூடாதபடி ஒருவேளை இதுவே உங்களுடைய கடைசி இரவாக இருக்கக்கூடும். ஒருவேளை இன்றிரவே நீ தேவனுடைய செய்தியை கடைசி முறையாய் புறம்பே தள்ளுகிறவனாக இருக்கக்கூடும். அப்படி செய்யும்பட்சத்தில், நீ தேவனுடைய பார்வையிலே ஒரு விசுவாச துரோகியாய் காணப்படுவாய்.

*செய்தி: யூபிலி ஆண்டு*

★★★★★



நாம் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு அதைக் குறித்து சிந்தித்துக் கொண்டோ அல்லது வியந்து கொண்டு இருக்கவோ நமக்கு நேரமில்லை. நாம் துரிதமாக தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது. காலம் சமீபமாயுள்ளது. இன்றிரவு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் ஜனங்களுக்கு, உங்களுடைய தீர்மானத்தைச் செய்வதற்கு இதுவே உங்களுடைய கடைசி தருணமாக இருக்கலாம். இது அவசரமாக இருக்கிறது. நாளைய தினம் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில்

செயல்பட வேண்டாம். நாளை என்பது ஒருக்கால் உங்களுக்கு வராமலேயே போகலாம்.

***செய்தி: தீர்மானத்தின் நேரம்***

★★★★★



176. இப்பொழுது அவன் கதவண்டை நின்று, “வேளையானது சமீபமாய் உள்ளது. நான் உரைத்த தேவனுடைய வார்த்தையானது நிறைவேற்றப்படும்” என்று பகிரங்கமாக கூறினான். அது உண்மை. அவன் பேழைக்குள்ளாகச் சென்றான்.

177. அவன் பேழைக்குள்ளாக சென்றபொழுது, என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? தேவன் கதவை அடைத்தார். அதை அடைக்க ஒருவரும் இல்லாதிருந்தனர். தேவன் அதை அடைத்தார். எல்லாம் அவ்வளவுதான். இரட்சிக்கப்படுவதற்கான கடைசி தருணம் போய்விட்டது.

***செய்தி: தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள போராட்டம்***

★★★★★



இது ஒருக்கால் உங்கள் கடைசி தருணமாயிருக்கலாம். வாலிபரானாலும் வயோதிபரானாலும், உங்களால் சபைக்கு வர முடிகிறது. எதையும் செய்யாமல் விட்டுவிடாதீர்கள். நீங்கள் ஆழமான உத்தமமுள்ளவர்களாயிருங்கள். பாவமனைத்தையும் மற்றவைகளையும் புறம்பே தள்ளிவிடுங்கள். தேவனுடைய முகத்துக்கு நேராக நோக்கி, "ஆண்டவரே, உம்மை நான் பிரீதிபடுத்துகிறேனா?" என்னும் கேள்வியைக் கேளுங்கள். "கர்த்தராகிய இயேசுவே, நான் வேறென்ன செய்ய முடியும்? இந்த வாழ்க்கை முடிவுற்ற பிறகு, உம்மைச் சேவிக்க எனக்கு வேறொரு தருணம் கிடைக்காது. கர்த்தராகிய தேவனே, எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள சமயம் இது ஒன்று மாத்திரமே. நான் என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் எனக்குத் தெரியப்படுத்தும். நான் சென்று இதை செய்ய வேண்டும், அதை செய்யவேண்டும் என்றால், நான் சந்தோஷமாக செய்வேன்" என்று சொல்லுங்கள்.

அதை நாம் உத்தமமாய் சிந்தித்துப் பார்க்கிறோமா? சிறுவர் அதை சிந்தித்துப் பார்க்கின்றனரா? நடுத்தர வயதுள்ளோர் அதை சிந்தித்துப் பார்க்கின்றனரா? வயோதிபர் அதை

சிந்தித்துப் பார்க்கின்றனரா? இளைஞர் அதை சிந்தித்துப் பார்க்கின்றனரா? நாமெல்லாரும் போக வேண்டும். நாளை காலை முன்பு நாம் எல்லோரும் போய்விட்டிருக்க மாட்டோம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நமக்குத் தெரியாது. "அது என்னை கவலையில் ஆழ்த்துகிறது" என்று நீங்கள் கூறலாம். அது அவ்விதம் செய்யக் கூடாது. வெளிப்படையாய் கூறினால், இந்த பழைய பூச்சி அரிக்கும் வீட்டை விட்டுச் செல்வதற்கு நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

*செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை*

★★★★★



22. ஆகையால் நண்பனே, நீ ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடாதபடி நிச்சயமுடையவனாயிரு. அது - அது ....... அது பலனளிக்காது. வெறுமனே ஒழுங்கற்ற விதமாய் அதனண்டைச் செல்லாதே. நிச்சயமுடையவனாயிரு, இரட்டிப்பான நிச்சயமுடையவனாயிரு, ஏனென்றால் உனக்கு மற்றொரு தருணம் கிடைக்கிறதில்லை. நீ இங்கே பூமியின் மேல் இருக்கும்போது, இதுவே உன்னுடைய தருணமாய் இருக்கிறது.

23. ஐசுவரியவானையும், லாசருவையும் நினைவில் கொள்ளுங்கள். அவனுக்கும் இவனுக்கும் இடையே எந்த மனிதனும் எப்போதும் கடந்திராத அல்லது எப்போதும் கடக்க முடியாதபடியான ஒரு பெரும் பிளவு இருந்தது. புரிகின்றதா? நீங்கள் மரிக்கும்பொழுது, அதுவே இதற்கு தீர்வாகிறது. அந்த இடங்களிலிருந்து அவர்கள் உங்களுக்கு ஜெபிக்கிறார்கள் என்று ஜனங்கள் உரிமை கோருவதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் நம்பவேண்டாம். அது தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாயிருக்கிறது. புரிகின்றதா? “மரமானது எப்பக்கமாக சாய்கிறதோ, சாய்கிறவிதமாகவே, அந்த விதமாகவே அது விழுகிறது”. இயேசு

தாமே, “ஒரு பெரும் பிளவு இருந்தது என்றும், ஒரு மனிதன் மரித்து, நரகத்திற்கு சென்றுவிடும்போது, அவன் (ஒருபோதும்) பரலோகத்திற்கு வரவே முடியாது. எந்த மனிதனுமே அதை எப்போதுமே கடந்ததில்லை யென்றும், ஒருபோதும் அதை கடக்கவே முடியாது” என்றும் கூறினார், என்னைப் பொறுத்தமட்டில் அதுவே இதற்கு தீர்வாகிறது. இயேசு அது இவ்வாறு இருந்தது என்று கூறிவிட்டபோது அதைக் குறித்த யாவும் அவ்வளவுதான்.

24. ஆகையால் சற்று நினைவிருக்கட்டும். இப்பொழுது இது உங்களுடைய தருணமாயிருக்கிறது. இன்றிரவு இது உங்களுடைய கடைசி தருணமாயிருக்கலாம்.

*செய்தி: அடையாளத்தின் சத்தம்*

★★★★★

# “தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. ஆயத்தமாகு!”





சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

51. இப்பொழுது, நாம் அந்த நேரத்தை குறித்து எண்ணிப்பார்க்க முடியும்... மேலும்-மேலும் எப்போதுமே, தேவனால் அருளப்பட்ட வழியை ஏற்றுக்கொள்கிற மனிதன், எப்போதுமே விடாப்பிடியுடைய ஒரு மதவெறியனாக கீழே நோக்கிப் பார்க்கப்படுகிற ஒரு மனிதனாகவே இருக்கிறான். அவன் எப்போதுமே, எல்லா காலங்கள்தோறும், உலகத்தால் ஒரு மதவெறியனாக எண்ணப்பட்டான். தேவனுடைய மார்க்கமும், இந்த உலகத்திற்கான இரட்சிப்பும், எக்காலத்திலும், ஒருபோதும் இந்த உலகத்தின் ஜனங்களிடம் பிரபலமாக இருந்ததே கிடையாது, இல்லவே இல்லை, எப்போதும் அவ்வாறு இருந்ததேயில்லை. அவர், "நீங்கள் அன்புகூர்ந்தால்..." என்றார். உலகமானது தன்னுடையவர்களை அறிந்துள்ளது. அது சரியே. "நீங்கள் உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூர்ந்தால், தேவனுடைய அன்பு உண்மையாகவே உங்களுக்குள் இல்லை." எனவே விசுவாசத்தினாலே நடப்பது என்பது, எப்போதுமே கடினமாக இருந்து வருகிறது,

போராட்டமான வழியாக இருக்கிறது. ஆனால், அது அந்த மனிதனுக்கு கடினமான போராட்டமாக இருப்பதில்லை. உலகம் அவர்களை நோக்கிப் பார்த்து, "நல்லது, அந்த ஜனங்கள் நிச்சயமாக பைத்தியம் பிடித்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்; அவர்கள் வேடிக்கையாக நடந்த கொள்கிறார்களே" என்று கூறுகிறார்கள். அது எப்போதுமே அந்தவிதமாகத்தான் இருந்து வருகிறது, ஏனென்றால் அவன் தனக்காக தேவன் அருளியிருக்கிற வெளியே செல்லும் அந்த வழியை ஏற்றுக்கொண்டு விட்டான்.

52. ஜலப்பிரளயக்காலத்திற்கு முன்பிருந்த உலகத்தில், நம்முடைய தகப்பனாகிய நோவா, அவன், அநேகமாக, அங்கே வெளியிலிருந்து, ஒருநாள் பிற்பகல், தன்னுடைய வேலையைவிட்டு வீட்டிற்கு வந்து, அவன் ஒரு விவசாயியாக இருந்தான், அவன் தன்னுடைய மனைவியிடம், "கர்த்தர் இன்று என்னிடம் பேசி, போய் ஒரு பெரிய பேழையைக் கட்டும்படி என்னிடம் கூறினார்" என்று சொல்லுவதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா.



53. “நல்லது,” அவள், “நோவாவே, உங்களால் எப்படி ஒரு பேழையைக் கட்ட  முடியும்? நீர் ஒரு விவசாயி ஆயிற்றே. நீர் எப்படி ஒரு பேழையை எப்பொழுதாவது செய்ய முடியும்?” என்று கூறியிருப்பாள்.

54. “நல்லது, மழை பெய்யப் போகிறது என்று தேவன் சொல்லியிருக்கிறார், முழு உலகத்தின்

மேலும் வெள்ளப்பெருக்கு வரப்போகிறது, எல்லாரும் தண்ணீரில் மூழ்கி மரிக்கப் போகிறார்கள். நான் அவருடைய வார்த்தையைப் பின்பற்றினால், நான் அதிலிருந்து தப்பித்துக்கொள்வேன் என்று அவர் என்னிடம் சொன்னார்."



55. அந்தவிதமாகத்தான் நாம் எப்போதுமே தப்பித்துக்கொள்ளுகிறோம் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தேவனுடைய காரியத்திட்டத்தைப் பின்பற்றுவது தான் அந்த வழியாகும். நாம் எப்பொழுதாவது அதைச் செய்யக் கூடிய ஒரே வழி அதுதான்.



56. நோவா அங்கே வெளியிலிருந்து இந்தப் பேழையை கட்டிக் கொண்டிருப்பதை (building away) என்னால் காண முடிகிறது, அது வெளியே ஒரு பெரிய உலர்ந்த பூமியின் நடுவில் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது, அங்கு ஒருபோதும் வானத்திலிருந்து ஒரு மழைத்துளியும் ஒருபோதும் விழுந்ததே கிடையாது. அங்கே ஒருபோதும் மழையாக எதுவுமே வானங்களிலிருந்து வெளியே வந்து (பெய்ததே) கிடையாது, வானத்தில் ஒருபோதும் ஒரு மேகமாவது ஒருபோதும் இருந்ததில்லை; இருப்பினும், நோவா அங்கே வெளியே ஒரு பேழையைக் கட்டிக் கொண்டிருந்தான் (building away). அது எவ்வளவு முட்டாள்தனமாக காணப்பட்டிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா? ஏன், மாம்ச சிந்தைக்கு, அந்த மனிதன் பைத்தியக்காரனாகத்தான் இருந்தான்.

57. பிற்பகல் வேளையில், ஜனங்கள் தங்கள் வேலையிலிருந்து வீட்டுக்கு வந்து, பட்டணத்தில் இருந்து, “சொல்லுங்கள், அங்கே வெளியே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் அந்த மழைக் கதையை நீங்கள் நம்புகிறீர்களா? அந்தக்

கிழட்டு பித்து கொள்ளியைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? ஏன், நீங்கள் எப்பொழுதும் கண்டதிலேயே அது மிகவும் பைத்தியம்பிடித்த ஆளாக இல்லையா? அங்கே வெளியில் ஒரு-ஒரு பேழையை கட்டிக் கொண்டு (building away), வானத்திலிருந்து வெள்ளம் விழப் போகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறானே, ஏன், அந்த மனிதனுக்கு பைத்தியம் தான். அங்கே மேலே எதுவும் கிடையாது. தேவன் எப்போதுமே இங்கே கிழே... இவ்விதமாக, நீர்ப்பாசனம் மூலமாகவே தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். அங்கே அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது" என்று கூறிக் கொண்டிருப்பதை என்னால் கேட்க முடிகிறது.

58. ஆனால் அதுதான் தப்பிக்கொள்ளும்படியான வழி என்று தேவன் அவனிடம் கூறினார், அவன் கட்டிக்கொண்டிருக்கும் (building away) அந்த வழிதான் தப்பிக்கொள்ளும் வழியாக இருந்தது. "நோவாவின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" என்று இயேசு கூறியிருக்கிறார். ஜனங்களுக்குப் பைத்தியமாகத் தோன்றுகிற ஒரு திட்டம் பூமியின்மேல் இருக்கும் (அது சரியே.), அது

அப்படியே முட்டாள்தனமாக இருக்கும். ஆயினும், அது தேவனுடைய திட்டமாக இருக்கிறது, ஏனென்றால் அவர்கள் தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு பேழையைக் கட்டிக் கொண்டிருப்பார்கள் (building away), அந்தப் பேழை இயேசு கிறிஸ்துவாக இருக்கிறது. அது சரியே. அது சரியே, அவருக்குள் மனமாற்றமடைய முயற்சித்தல்.

59. இப்பொழுது... தப்பிக்கொள்ளும்படியாக அங்கேயிருந்த ஒரே வழி அதுதான் என்று தேவன் நோவாவிடம் கூறினார். அது மாத்திரமே ஒரே வழியாக இருந்தது. அவன் 120 வருடங்கள் பிரசங்கம் பண்ணினான். ஜனங்களோ அவனை அசட்டை செய்தது, அவனைப் பார்த்து நகைத்து, அவனைக் கேலி செய்து, பரிகசித்து, ஏளனம் செய்தார்கள்.

60. நோவாவின் நாட்களில் நடந்தது போல, புசித்தும்... அவர்கள் எப்படிப்பட்ட, எந்தவிதமான ஒரு உலகத்தைக் கொண்டிருந்தார்கள்? அப்படியே இப்பொழுது அவர்கள் செய்து கொண்டிருப்பது போன்று, அவர்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண்கொடுத்தும், எல்லாவித வித்தியாசமான காரியங்களையும் உடையவர்களாக

இருந்தார்கள். நமக்கு இப்பொழுது இருக்கும் நாகரிகத்தைக் காட்டிலும் உயரிய நாகரிகத்தை கூட அவர்கள் கொண்டிருந்தார்கள். அது அவ்வண்ணமாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கவில்லை என்றால், முயற்சித்துப் பாருங்கள்... அங்கேயிருக்கும் கூர்நுனிக்கோபுரத்தை நாம் மீண்டும் உண்டாக்க முயற்சித்துப் பார்ப்போம். நாம் அதையே, அல்லது பெண் நர சிங்க உருவச்சிலையையோ, (sphinx) அல்லது அந்த வரிசையிலுள்ள ஏதோவொன்றைக் கட்ட முயற்சி செய்து பார்ப்போம். எகிப்தியர்கள் பிணங்களைப் பதனிட்டு வைத்திருந்த, தங்களுடைய பிணம் பதனிடல் (embalming) போன்ற ஒரு மம்மியை செய்ய முயற்சித்து, நாம் அந்நாளின் நாகரிகத்திலிருந்து எவ்வளவு-எவ்வளவு தூரமாக இருக்கிறோம் என்று கண்டுகொள்ளுங்கள். நாம் அதிலிருந்து அப்பால் தொலைவில், தூரத்தில் இருக்கிறோம்.

61. இதைக் காட்டிலும் ஒரு உயரிய நாகரிகம் இருந்த ஒரு நாளில், அங்கே வெளியிலிருந்த ஒரு மனிதன் ஒரு பேழையைக் கட்டிக் கொண்டிருந்து, மழை பெய்யப் போகிறது என்று கூறினான், வானங்களில் ஒரு மேகமும் கூட ஒருபோதும் இருந்ததில்லை... உலகம் இருந்தது முதற்கொண்டு,

இரண்டாயிரம் வருடங்களாக, அங்கே ஒரு மேகமோ, அல்லது இடி முழக்கமோ, மின்னலோ, அல்லது வேறு எதுவுமோ ஒருபோதும் இருந்ததேயில்லை. ஆயினும், அதைச் செய்யப் போவதாக தேவன் அவனிடம் கூறினார். ஏனென்றால் அவருடைய மகத்தான ஆவியானவர் இந்த உலகத்தை அதனுடைய cater-ஐ விட்டு வெளியே தள்ளப் போவதாக இருந்தார், அது அங்கே வெளியேயிருந்து, பின்னோக்கி சாயும்படி செய்யப் போவதாக இருந்தார், ஏனென்றால் மேகங்கள் வர வேண்டியிருந்தது. தேவன் அவ்வாறு கூறியிருப்பாரென்றால், அது இருக்கப் போகிறது என்று தேவன் கூறினவிதமாகவே அது அப்படியே இருக்கத்தான் போகிறது.



62. நோவா பேழையை சரியாகக் கட்டி (built away), கீல்பூசி, அதற்குள்ளே தார்

இட்டான்; அந்தக் காரியமானது தண்ணிரில் இருந்து கொண்டிருந்தது போன்றே. மழை பெய்வது மட்டுமல்ல, ஆனால் முழு உலகத்தையும் வாரிக்கொண்டு போகப் (wash over) போகிற ஒரு ஜலப்பிரளயம் வரப்போவதாக இருந்தது. நோவா தேவனை விசுவாசித்தான், அவன் தேவ எச்சரிப்பு பெற்று, விசுவாசத்தினாலே நடந்து, பேழையைக் கட்டி, தேவனால் அருளப்பட்ட வழியில் வேலை செய்து கொண்டிருந்தான்.

63. என்னே! ஓ, அவன் அடித்துக்கொண்டிருக்கையில் (beating away), கடைசி பாகம் ஒன்று சேர்க்கப்பட்டு, இணைக்கப்படுகையில், ஜனங்கள் சுற்றிலும் நின்றபடி, நகைத்து, “ஏய், அந்தப் பெரிய பழங்கால காரியத்தோடு நீ என்ன செய்யப் போகிறாய்? ஏன் நீ...” என்று கூறிக்கொண்டிருப்பதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது. அவர்கள் அவனைப் பார்த்து கேலி செய்யவும் மற்றும் எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தார்கள். அவனோ அப்படியே கட்டிக் கொண்டிருந்து (built away), அதனுடைய முனையில் நின்று, அவனால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு கடினமாகப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான்.

64. பிறகு முடிவாக, தேவன் அதைக் குறித்து களைப்படைந்த போது, அதோ ஒரு நாள் வருகிறது. அப்போது வினோதமான வழக்கத்துக்குமீறிய உணர்ச்சி பூமியின் மேல் வந்து கொண்டிருப்பதை காண்பதாக என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது. சற்றேறக்குறைய இன்று இருப்பது போலவே, எல்லாருமே அமைதியற்றவர்களாய், "ஏதோவொன்று நடக்கப் போகிறது?" என்கின்றனர். நீங்கள் வெளியே வீதியில் போய், உங்களுக்கு விருப்பமான எந்த பாவியிடமும் பேசிப் பாருங்கள்; நீங்கள் ஒரு மதுக்கடைக்குள் (barroom) செல்லக் கூடுமானாலும், ஏதோவொன்று நடக்கப் போகிறது என்று எல்லாருக்குமே தெரிகிறது. சரி. ஏதோவொன்று நடக்கப் போகிறது. நியாயத்தீர்ப்பு உலகத்தின்மேல் இருக்கிறது, அவர்கள் அதைக் காண்கிறார்கள்.

65. இங்கே வெளியே வயலில் மேய்ந்து கொண்டிருக்கும் ஒரு ஆட்டுக்குட்டியை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா. அந்தப் பரிதாபமான சிறு ஆட்டுக்குட்டியால் எதையும் காண முடியவில்லை, ஆனால் அது அமைதியற்றதாக உணரத் தொடங்குகிறது, அங்கே ஏதோவொன்று நடக்கப் போகிறது. சரளை மீது

நெரித்து நடந்தபடி, அதோ அங்கே புதர்களில், ஒரு சிங்கம் வந்து கொண்டிருந்தது. அதைக் குறித்து ஏதோவொன்றுள்ளது, அதுவால் அதைக் கூற முடியும். ஏதோவொன்று நடக்கப் போகிறது. அதுவால் அந்த சிங்கத்தைக் காண முடியவில்லை, ஆனால் அங்கே ஏதோ தவறாயிருக்கிறது என்பது அதற்குத் தெரிகிறது.

66. சகோதரனே, அந்த விதமாகத்தான் இன்றும் உள்ளது, இந்த உலகம் போய்க்கொண்டிருக்கும் மிகவும் இருண்டதும், இருளும், பாவமும் மற்றும் காரியங்களுமான இந்த கதம்ப கூளம் (conglomeration) எல்லாவற்றோடும் இன்று ஒரு காட்சி அமைப்பு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது; வெளியே எல்லா காலங்களிலும் எப்பொழுதாவது நடிக்கப்பட்ட மிக மகத்தான நாடகத்திற்கான நாடக மேடையை அவர்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்: இயேசு கிறிஸ்துவின் வருகை. மனிதனால் … முடியாது.

67. ஜனங்கள் கடைசி நாளின் ஆவிக்குள்ளாகும் வரைக்குமாக, நம்மால் கடைசி நாளைக் கொண்டிருக்க முடியாது.

68. ஜனங்கள் சுகமளிக்கும் ஆராதனையின் ஆவிக்குள்ளாகும் வரைக்குமாக, நம்மால் இங்கே ஒரு சுகமளிக்கிற ஆராதனையைக் கொண்டிருக்க முடியாது. ஜனங்கள் பரிசுத்த ஆவியால் நிறையப்படும் அந்தவிதமான ஒரு சூழ்நிலைக்குள்ளாகும் வரைக்குமாக நம்மால் பரிசுத்த ஆவியால் நிறையப்பட முடியாது. அந்த நாளில், பூமியின்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும்படிக்கு, ஜனங்கள் அந்த சூழ்நிலைக்குள் இருந்தார்கள். புசித்தல், குடித்தல், பெண்கொண்டு, பெண்கொடுத்தல், மற்றும் அதைப்போன்று இவ்விதமான காரியங்கள் எல்லாம் உடைய, அதே சூழ்நிலையில் தான் இன்றும் அவர்கள் இருக்கிறார்கள். நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக, தேவனுடைய மகிமை பிரசங்கிக்கப்பட்டும் நிரூபிக்கப்பட்டும் வருகிறது, மேலும் சபையை மகிமைக்குள் எடுத்துக்கொண்டு போகப் போகிற இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் ஒரு-ஒரு திருஷ்டாந்தமாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமையானது வைக்கப்பட்டிருக்கிறது. அது சரியே. மனிதர்களோ அதைப் புறக்கணித்து, அதற்கு எந்தக் கவனமும்

செலுத்துவதில்லை, ஏனென்றால் அவர்கள் கடைசி நாளில் ஆவிக்குள் இருக்கிறார்கள்.

69. உலகமானது இதைப்போன்றவற்றிற்குள் வர வேண்டியிருக்கிறது. தேவன் ஒரு நீதியான ஜனங்களின் மேலே தம்முடைய கடுங்கோபத்தை ஊற்றினால், அவர் அநீதியுள்ளவராயிருப்பார். அவர்கள் அவரைப் புறக்கணித்து, தூரமாக நடந்து போய்விட்டார்கள், சாத்தான் அவர்களைப் பிடித்துக் கொண்டான். அதோ அந்த சமயத்தில் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேவனோ இன்று ஒரு அருளப்பட்ட வழியை, தப்பிக்கொள்ளும்படியான ஒரு போக்கை உடையவராயிருக்கிறார். அந்த வழியானது இயேசு கிறிஸ்துவாக இருக்கிறது, மறுபடியும் பிறப்பதின் மூலமாகவே.

70. மின்னல் முதல்முறையாக வந்து, வானத்தின் குறுக்கே பளிச்சிடுவதை என்னால் காண முடிகிறது, நோவா, “தேனே, வேகமாக வா” என்றான்.



71. அவனுடைய மகன்கள் தங்கள் மனைவிமார்களிடம், "வேகமாக வாருங்கள்" என்று கூறினார்கள்.

72. அவர்கள் பேழைக்குள் பிரவேசித்தார்கள். ஏன், ஜனங்களோ, "என்ன நடந்ததோ என்று வியப்பாக உள்ளதே? கொடுங்காற்று ஏதோ ஓரிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறதே" என்று கூறினார்கள்.

73. ஆனால் மிருக சிருஷ்டிப்புகளும் கூட ஏதோ தவறாயிருக்கிறது என்று அறிந்து கொள்ளும் அளவுக்கு அப்படிப்பட்ட ஒரு இழுப்பு அங்கேயிருந்தது. அங்கே மேலே அமர்ந்து கொண்டிருந்த வயதான அம்மா பறவையும் அப்பா பறவையும் அப்படியே பாடிக்கொண்டிருப்பதை

என்னால் காண முடிகிறது. மின்னல் முதல் தடவையாக இடிஒலியை எழுப்ப, முதல் முறையாக அந்த அடையாளங்களும் அற்புதங்களும் சம்பவிக்கத் தொடங்கினபோது, தகப்பன் பறவையானது, "தாய் பறவையே, வேகமாக வந்துவிடு, நாம் நேராக பேழைக்குள் போய்விடுவோம், ஏனென்றால் நோவா சொன்னது சரியாகச் சம்பவிக்கப் போகிறது. அது தேவனுடைய ஆவியானவர் எனக்குள் அசைவாடுவதாக இருக்கிறது, நாம் பேழைக்குள் போய்விடுவோம்" என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

74. அங்கு வெளியே அந்த மலையின் பக்கவாட்டில் மேய்ந்து கொண்டிருந்த தாய் ஒட்டகத்தையும், இங்கேயிருக்கும் தகப்பன் ஒட்டகத்தையும் என்னால் காண முடிகிறது. மின்னலின் முதலாவது பளீரொளியானது ஆகாயத்தினூடாகப் போய், அடையாளங்களும் அற்புதங்களும் கண்ணுக்குத்தோன்றத் தொடங்கின போது, அப்பா ஒட்டகமானது அம்மா ஒட்டகத்தைப் பார்த்து, "வேகமாக வா, இதுதான் அது. இங்கே உள்ளே ஏதோவொன்று பலமாக பற்றி இழுத்துக் கொண்டிருக்கிறது, ஏதோவொன்று என்னை அசைத்துக் கொண்டிருக்கிறது, நான்

பேழைக்குள் போயாக வேண்டும்" என்று கூறுவதை நான் கேட்கிறேன். அவைகள் பேழைக்குள் வரும் என்று தேவன் நியமித்திருந்தார் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்.



75. இன்றும் நான் அதை நம்புகிறேன், தேவனுடைய குமாரனுடைய வருகையின் அடையாளங்களும் அற்புதங்களும் எல்லாவிடங்களிலும் தோன்றிக் கொண்டிருக்கும் போது, தேவனுடைய சத்தத்தைக் கேட்க வேண்டுமென்று தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிற

ஒவ்வொரு மனிதனோ அல்லது பெண்ணோ, அவர்களால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு வேகமாக பேழைக்கு நெருக்கியடித்துக்கொண்டு சென்று, பாதுகாப்புக்குள் வந்து கொண்டிருக்கிறார்கள்; அது மனிதன் தப்பிக்கொள்ளும்படியாக தேவனால் அருளப்பட்ட வழியாக இருக்கிறது. அது சரியே. அடையாளங்கள் தோன்றுவதையும், அற்புதங்கள் தோன்றுவதையும், மறை பொருளாயிருக்கும் இரகசியமான காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள், நிச்சயமாக, ஆகாயத்தினூடாக பறக்கும் தட்டுகளும் மற்ற எல்லா காரியங்களும். இயேசு, "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், அக்கினி ஸ்தம்பங்களும் மற்றும் புகைக்காடாகிய அடையாளங்கள் உண்டாகும்; கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே, இது சம்பவிக்கும்" என்று இயேசு கூறியிருக்கிறார்.

76. அவர் இந்த எல்லாவற்றையும் பேசியிருக்கிறார்: சமுத்திரம் முழக்கமாயிருக்கும், ஆழிப் பேரலைகள் உடைத்துக்கொண்டுவரும்; மற்றும் எல்லா காரியங்களும் சம்பவிக்கும்; மனிதரின் இருதயங்கள் செயலிழந்து போகும், நாம் எப்பொழுதும் கொண்டிருந்ததிலேயே

இருதயக்கோளாறு உடைய மிகப்பெரிய காலம்; திகில்; குழப்பமான காலம்; தேசங்களுக்கிடையே இடுக்கண். ஒ, என்னே. தீர்க்கதரிசி எப்படியாக, "இங்கேயிருக்கும் குதிரை இல்லாத அந்த வண்டிகள், அவைகள் அகன்ற சாலைகளில் விரைந்தோடும், அவைகள் தீவட்டிகளைப்போல விளங்கி, மின்னலைப் போல வேகமாய் ஓடும்" என்று கூறியிருக்கிறான். உரைக்கப்பட்டிருக்கிற எல்லாமே, நாம் இன்று அதனுடைய முன்புறத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

77. அது என்ன? அது ஜனங்களாகிய உங்களுக்கு தேவனுடைய எச்சரிக்கையாக இருக்கிறது: "தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. ஆயத்தமாகு!"

78. "சகோதரன் பிரன்ஹாமே, நான் ஏன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்பட வேண்டும்?" சகோதரனே, நீ ஒரு கலியாணத்திற்காக ஆயத்தப்படுகிறாய்; நீ மற்ற எதற்காகவும் ஆயத்தப்படுகிறாய். இந்தக் காரியங்கள் வந்து கொண்டிருப்பதை நீ காணும்போது, நீ தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. நீ உன்னுடைய தலையில் நரைமுடியைக் காணும் ஒவ்வொரு முறையும், உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தப்படுவது நல்லது

என்பதையே அது அர்த்தப்படுத்துகிறது. இறுதிச்சடங்குகளை மேற்பார்வையிடுபவர் செய்யும் ஏற்பாடுகளை நீ கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுவது தான் அதற்கு அர்த்தம். ஒவ்வொரு முறை ஒரு குழந்தை பிறக்கும்போதும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்பட வேண்டும் என்பது நினைவிருக்கட்டும். இறுதி சடங்கு ஊர்வலம் கடந்து செல்லும் ஒவ்வொரு தடவையும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. ஒரு எச்சரிப்பாக நீ சுவிசேஷத்தைக் கேட்கும் ஒவ்வொரு முறையும், தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு.

79. தேவன் தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை உடையவராயிருக்கிறார். நீங்கள் பாதுகாப்பாக இருக்கும் இடமாகிய, இயேசு கிறிஸ்துவுக்குள் இப்பொழுதே வந்துவிடுங்கள். அந்த மிருகங்கள் ஒவ்வொன்றும், ஜோடு ஜோடாக, சரியாகப் பேழைக்குள் பிரவேசித்தன. தேவனுடைய கடுங்கோபத்திலிருந்து உண்மையிலேயே தப்பிக்கொள்ள விரும்புகிறவர்களுக்காக தேவன் எப்போதுமே ஒரு வழியை உண்டாக்குகிறார்.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தி சரிபார்ப்பில் உள்ளது)

★★★★★



# ஆனால் தேவனோ அந்த பரியாசக்காரர்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: மரியாதைகள்
## Jeffersonville, Indiana, USA
## 61-10-15E

31. நாம் இப்பொழுது ஆரம்பித்து, வேதத்தில் காணப்படும் சில மனிதர்களைப் பார்ப்போம்.

முதலாவதாக, நான் நினைக்கிறேன் ..... நாம் சிறிது நேரம் நோவாவை எடுத்துக் கொள்வோம்.

நோவா தேவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றான். ஆனால், விஞ்ஞானம் உண்மையென்று

நிரூபித்தவைகளுக்கு அது முரணாயிருந்தது.

அவன் தேவனுடன் பேசினான், தேவனும் அவனுடன் பேசினார். அவன் பேழையை செய்யத் தொடங்கினான்.



அப்பொழுது பரியாசக்காரர் கடைசி நாட்களில் பரியாசக்காரர் எழும்புவார்கள் என்று வேதம்

கூறியுள்ளதே, அது போன்ற பரியாசக்காரர் அந்நாட்களிலும் இருந்தனர்.



இந்த பரியாசக்காரர் நோவாவை பரியாசம் செய்தனர்.

அவன் பேழை செய்வதைக் கண்டு, அவனுக்கு மூளைகோளாறு ஏற்பட்டுவிட்டதென்று எண்ணினர்.



ஆனால் தேவனோ அந்த பரியாசக்காரர்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார்.

ஏனெனில் அவர்கள் தேவனுடைய செய்தியாளனின்

பிரசங்கத்துக்கு செவிகொடுக்காமல், பேழைக்குள் செல்ல மறுத்தனர்.





அப்பொழுது தேவன் தமது தெய்வீக நியாயத்தீர்ப்பை பூமியின் மேல் அனுப்பினார்.

முதலாவதாக, அதை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணங் கொண்டிருந்த அனைவருக்கும் அவர் ஒரு வழியை உண்டு பண்ணினார்.



அவர்கள் அதிலிருந்து தப்பவில்லையென்றால், அவர்களுக்கு ஒன்று மாத்திரமே உள்ளது. தப்பித்துக் கொள்வதற்கு தேவன் ஆயத்தம்பண்ணின வழியை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போனால், ஒன்று மாத்திரமே உள்ளது. அது தான் தேவனுடைய நியாயத்தீர்ப்பு.



32. நீங்கள் இரண்டு காரியங்களை மாத்திரமே செய்ய முடியும் இரக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசிக்க வேண்டும்.




இவ்விரண்டில் ஒன்றை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றிரவு அந்நிலையில் தான் நாமிருக்கிறோம் நாம் தேவனுடைய

இரக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவருடைய நியாயத்தீர்ப்பில் நிற்கவேண்டும்.



அதிலிருந்து தப்பித்துக் கொள்ள விருப்பங்கொள்பவர்களுக்கு, தேவன் எப்பொழுதுமே அதற்காக ஒரு வழியை உண்டுபண்ணுகிறார். பின்பு அவர் ... மீதியுள்ளவர் நியாயத்தீர்ப்பில் நிற்கவேண்டும்.

தேவன் அவ்வாறு விரும்புவதனால் அல்ல, அவர்களாகவே அந்த வழியை தெரிந்து கொண்டதனால். பாருங்கள், தாங்களாகவே அந்த வழியை தெரிந்துகொள்கின்றனர்.



நண்பர்களே, இன்றிரவு நாம் அந்நிலையில் தான் இருக்கிறோம் – அதேதான்.



தப்பித்துக் கொள்ள தேவன் வகுத்த வழியை நாம் தெரிந்து கொள்ளலாம், அல்லது அவருடைய நியாயத்தீர்ப்பில் நாம் நிற்கலாம் இவ்விரண்டில் எதை

வேண்டுமானாலும் நாம் செய்யலாம்.

தப்பித்து கொள்ளும் வழியை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதற்காக, இன்றிரவு மகிழ்ச்சியாயிருக்கிறீர்கள் அல்லவா?

ஏனெனில் அந்த வழியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர் அனைவருமே நியாயத்தீர்ப்பின் கீழ் வரவேண்டும்.

★★★★★

# நோவாவின் நாட்களைப் போலவே!

நோவாவின் நாட்களில் அந்த சந்ததியிலிருந்து எத்தனை பேர் காப்பாற்றப்பட்டனர்? பல லட்சக்கணக்கானோரில் எட்டுப்பேர். எனவே அவர், “மனுஷ குமாரனுடைய வருகையிலும் அப்படியே நடக்கும்” என்றார்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# பரி. மத்தேயு, 7ம் அதிகாரம் 13 மற்றும் 14 வது வசனங்கள்

இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

## செய்தி: **வாசல் இடுக்கமாய் உள்ளது,**
## **(Strait Is The Gate)**

82. சபையைச் சேர்ந்திருந்த ஒவ்வொருவருமே இரட்சிக்கப்படுவர் என்றே அவர்கள் எண்ணிக் கொண்டனர். ஆனால் இயேசுவோ, "வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்றார்.

83. சபையே இந்த காலையில் நான் உங்களை எச்சரிக்கட்டும். ஜாக்கிரதையாயிருங்கள்.

இன்றைக்கு அது நம்முடைய சுயநீதிக்கே, நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிற மாய்மால சந்ததியின் சுய திருப்திக்கே நேரத்தை எடுத்துக் கொள்கிறது.

அந்த நேரத்தின் போது புருஷர்களும், ஸ்திரீகளும் சபைகளில் நின்று, சாய்மான இருக்கைகளில் இருந்துகொண்டு, தேவனுடைய

துதிப்பாடல்களைப் பாடிவிட்டு, பின்னர் அந்த சபையிலிருந்து நடந்து வெளியே சென்று, சிகரெட்டுகளை புகைத்து, மதுபானம் குடித்து, கீழ்த்தரமான கேலிப் பேச்சுக்களைப் பேசி, தங்களை 'கிறிஸ்தவர்கள்' என்று அழைத்துக் கொள்கிறார்கள்.

புருஷர்களும், ஸ்திரீகளும் பிரசங்க பீடத்தி லிருந்து நடந்து சென்று அல்லது சபையிலிருந்து, உயிர்த்தெழுதலின் வல்லமையுள்ள இடத்திலிருந்து செல்லும்போது, அங்கே அந்த மாறாத மேசியாவினுடைய அடையாளம் அவர்களுக்கு மத்தியில் அசைவாடிக்கொண்டிருக்கையில், கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாய் இருக்கவில்லையென்றால், ஏதோ காரியம் தவறாய் இருக்கிறது.

தேவன் அதை அனுப்புகிறபோது, செய்தித்தாள்கள் அதை ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு முன்னும் பின்னுமாக தீவிரமாக வெளியிடும் போதும், உறைபனி படர்ந்த வடக்குப் பகுதிகளிலிருந்து தென் மண்டல

வெப்பமிகுந்த காடுகள் வரைக்கும் அதை தீவிரமாய் வெளியிடும்போதும், ஜனங்கள் ஓயாது அதன் பேரில் தங்களுடைய புறமுதுகையே காட்டுகின்றனர்.

அப்பொழுது நாம் என்ன கூறமுடியும்? நாம் என்ன செய்ய முடியும்? எனவே நாம், "வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று அவர் கூறின வேத வாக்கியங்களுக்கே திரும்பிச் செல்கிறோம்.

84. அவர், "நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்" என்றார்.

கவனியுங்கள், நோவாவின் நாட்களில் உலகமானது கிட்டத்தட்ட இன்றைக்கு உள்ளது போன்றே மக்கட்தொகையை கொண்டிருந்தது. அவர்களுடைய விஞ்ஞானம் நம்முடையதை மிஞ்சுகிறதாய் இருந்து கொண்டிருந்தது.

அவர்கள் சிறகுடைய பெண்முக சிங்க உருவச்சிலைகளையும், கூர்நுனி கோபுரங்களையும் கட்டினர்.

இன்றைக்கு நாம் செய்ய முடியாத காரியங்கள் செய்யப்பட்டன. மேம்பட்ட, மகத்தான, அறிவாற்றலுள்ள ஜனங்களாய் இருந்தனர். நினைவிருக்கட்டும், இன்றைக்கு விஞ்ஞானம், "நள்ளிரவிற்கு ஒரு நிமிடமே உள்ளது" என்று கூறுகிறது.

மரண வேளைக்கான மணி அடிப்பதற்கு ஒரு நிமிடமே உள்ளது. அது நாம் நினைக்கிறதைக் காட்டிலும் காலதாமதமாய் உள்ளது. பரிசுத்த ஆவியானவர் இதை ஒவ்வொரு விசுவாசியினுடைய இருதயத்திற்குள்ளும் ஆழமாக பதியச் செய்வார் என்று நான் நம்புகிறேன். "நோவாவின் நாட்களைப் போலவே!"

85. நோவாவின் நாட்களில் அந்த சந்ததியிலிருந்து எத்தனை பேர் காப்பாற்றப்பட்டனர்? பல லட்சக்கணக்கானோரில் எட்டுப்பேர். எனவே

அவர், "மனுஷ குமாரனுடைய வருகையிலும் அப்படியே நடக்கும்" என்றார்.



86. "சோதோமின் நாட்களில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ குமாரனுடைய வருகையிலும் நடக்கும்." லட்சக்கணக்கானோரில் மூன்றே பேர் காப்பாற்றப்பட்டனர்.

87. அப்படியானால் நீங்கள், "பிரசங்கியாரே, அவரோடு கூட வரப்போகின்ற ஆயிரக்கணக்கானவர்களைக் குறித்து என்ன?"

என்று என்னிடம் கேட்கலாம். இப்பொழுது, சகோதரனே, அது அநேக சந்ததிகளினூடாக வந்தடைந்தவர்கள்.





88. இந்த சந்ததியிலிருந்து பன்னிரெண்டு பேர் வருவார்களானால், நான் ஆச்சரியமடைவேன். “வாசல் இடுக்கமும், வழி

நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்."

89. ஓ, நான் சபைகளை அறிவேன். அவைகள் என்ன கூறுகிறதென்றால், "நீங்கள் உங்களுடைய பெயரை புத்தகத்தில் பதிவு செய்துவிட்டால், நீங்கள் இதில் ஒரு அங்கத்தினராகி விடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் சரியாகி விடுவீர்கள்" என்கின்றன. அதைப் போன்று அப்படிப்பட்ட ஒரு வேத வாக்கியமே கிடையாது.

தங்களுடைய பெயரை புத்தகத்திலும், சபையிலும் பதிவு செய்திருக்கின்ற ஒவ்வொருவரும் செல்வார்களானால், அங்கே கோடான கோடி பேர் இருப்பார்களே! எல்லாக் காரியமும் அங்கே உள்ளே செல்லுமே!

அப்படியானால் அங்கே பரலோகத்தில் எல்லாவிதமான ஆவிகளும் இருக்குமே! அப்பொழுது பரலோகம் என்னவிதமான நிலையில் இருக்கும்? இப்பொழுது அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

90. யாராவது ஒருவர் என்னிடம், "இப்பொழுது சகோதரன் பிரான்ஹாம், ஒரு நிமிடம் பொறுங்கள். நான் இன்னார் - இன்னார், அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுவதை கேட்டேன். எனவே அவர்கள் அதை சென்றடைவார்கள் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று கூறலாம்.

91. அது அவர்கள் அதைச் சென்றடைவார்கள் என்பதையே பொருட்படுத்தவில்லை. பவுல் 1 கொரிந்தியர் 13ல், "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" என்றான்.

92. "ஓ, நான் இன்னார்-இன்னாருடைய கூட்டத்திற்குச் சென்றேன். ஓ, அவர் மகத்தான, வல்லமையான கிரியைகளைச் செய்தார். அவர் குருடர்களை பார்வையடையச் செய்ததை நான் கண்டேன்."

93. அப்படி செய்திருந்தும் அவர் இழக்கப்பட்டவராய் இருக்கக் கூடும்.

“அந்நாளில் அநேகர் என்னிடத்தில் வந்து, ’கர்த்தாவே! நான் உம்முடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறேன் அல்லவா? நான் உம்முடைய நாமத்தில் பிசாசுகளை துரத்தியிருக்கிறேன் அல்லவா? நான் உம்முடைய நாமத்தில் அநேக மகத்தான கிரியைகளை செய்திருக்கிறேன் அல்லவா?’ என்பார்களே. அப்பொழுது அவர், “அக்கிரம செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள், நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை” என்பார்.

“வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்,”

94. நான் உங்களை அதிரச்செய்யும் – சில கணக்கெடுப்புகளை உங்களுக்குக் கொடுக்கட்டும். சிக்காகோ பட்டணத்தில் மருத்துவ விஞ்ஞானப்படி, வைத்தியர்களுடைய புள்ளி விவரப்படி, சிக்காகோவில் மட்டும் முப்பதாயிரம் கருக்கலைப்பு காரியங்கள் செய்யப்பட்டுள்ளதாக மருத்துவர்கள்

கூறியிருக்கின்றனர். எத்தனைபேர் இந்த சிறிய போதை மாத்திரைகளையும், மற்ற காரியங்களையும் எடுத்துக் கொண்டு கருக்கலைப்பு காரியங்களைச் செய்கின்றனர்?

95. பரிசுத்த விவாகத்தின் மூலம் பிறந்த குழந்தைகளைக் காட்டிலும் முறை தவறிப் பிறந்த பிள்ளைகளே அதிகமாய் ஐக்கிய நாடுகளில் உள்ளனர் என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

உபாகமம் 14 : 2-ல் ஒரு வேசிப்பிள்ளை, அதற்கான காலமுடிவாக நானூறு வருடங்களை எடுத்துக் கொள்ளும் என்று வேதம் கூறியுள்ளதை எத்தனைபேர் அறிந்துள்ளீர்கள்?

அவர்களுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகளுடைய, பிள்ளைகளுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகளே கர்த்தருடைய சபையில் நிற்கலாகாது. நானூறு வருடங்கள், பத்து தலைமுறைகள்.

ஒரு தலைமுறை என்பது நாற்பது வருடங்கள்.

அவர்களுடைய பூட்டனாருடைய, பூட்டனாருடைய, பூட்டனாருடைய, பூட்டனாருடைய, பூட்டனாருடைய, பூட்டனாருடைய பூட்டனாருடைய பூட்டனார் ஒரு வேசிப்பிள்ளையாய் இருந்ததால், இவன் தொடர்பற்றவனாய் இருக்கிறானே!

இப்பொழுது என்ன? அது எங்கு மாற்றப்பட்டது என்பதை எனக்குக் காட்டுங்கள்.

96. நாம் மீண்டும் தெளிநிலை பெற என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது வேசிப்பிள்ளைகளோ விபச்சாரத்தின் காரணமாகவும் ஆண்களைப் போலவே பாவமுள்ள ஸ்திரிகள் வீதியில் ஆடையணிந்து செல்லுதல், சிகரெட்டு புகைப்பவர்கள், மதுபானம் அருந்துபவர்கள், கிறிஸ்தவர்கள் என்று உரிமைகோரி அழைத்துக் கொள்பவர்கள் தேவனுடைய பார்வையில் அருவருப்பாய் உள்ளனர்.

தேவனே அத்தகைய விபச்சாரிகளின் கூட்டத்தை தடை செய்வீராக. அது உண்மை. அப்படியிருந்தும் அவர்கள் தங்களை

கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்களே? இயேசு, "வாசல் இடுக்கமாயும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று கூறினதில் வியப்பொன்றுமில்லையே.

97. அவர்கள் தங்களைத் தாழ்த்தமாட்டார்கள். அவர்கள் விரைப்பானவர்களாய் இருக்கின்றனர்.

பாருங்கள், தாவீதுக்கு தான் செய்த தன்னுடைய பாவம் கூறப்பட்டபோது, அவன் உடனடியாக மனந்திரும்பினான். தேவன் அதற்காக அவனை நேசித்தார்.

ஆனால் நீங்கள் அவர்களிடத்தில் அவர்களுடைய பாவங்களை கூறினால், அவர்கள், "நான் ஒருபோதும் உங்களுடைய வீட்டிற்கு மீண்டும் வரவே மாட்டேன்" என்று கூறிவிடுவார்கள். ஏன்? அவர்கள் செல்வதற்கு ஏராளமான ஸ்தலங்கள் உள்ளன.

அவர்களால் அப்படிப்பட்ட காரியங்களுக்கு ஆதரவு கொடுக்கும் முறைகேடான ஸ்தலங்களுக்குச் செல்ல முடிகிறது.

ஆனால் இதுவோ பிரசங்கிமார்கள் முழுமையாக தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்து, எதனோடும் ஒப்புரவாகாமல், தேவனுடைய வார்த்தையை, சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டிய நேரமாய் உள்ளது. புருஷர்கள் தங்களை தாழ்த்த வேண்டும்.

★★★★★




https://branham.org/en/MessageAudio

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in